**திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2023 ஆண்டு தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் தொடர்பான வழங்கப்பட்டிருந்த 22 அறிக்கைகளுக்காகவும் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 1981 ஒக்தோபர் 16 திகதிய சுற்றறிக்கை இலக்கம் 107 இன் பிரிவு 04 இன் படி தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு 10 சதவீதம் ஒடுங்குபாக முறை பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 04 கமநல சேவைக் குழுக்களினால் வேறு சதவீதமொன்று பயன்படுத்தப்பட்டு பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டிருந்தமையால் வருமானம் ரூபா 294,224 தொகையினால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. | அடுத்த நிதியாண்டில் இதனை சரி செய்து நிதிக்கூற்றுக்களில் உரிய முறையின் படி தளபாடங்களுக்காக பெறுமானத் தேய்வுகள் கழிக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக் குழுக்களினால் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கியிருந்த இரண்டு சில் டிரக்டர் வண்டிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,080,668 இற்காக பெறுமதி | அடுத்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 06 கமநல சேவைக் குழுக்களில் ஏக்கர் வரி வருமானம் ரூபா 477,192 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் குறைவாகவும் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 378,081 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் தகவல்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உப்புவேலி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த உண்மையான பெறுமதி ரூபா 1,602,150 தொகைக்கான 04 கணினிகள், 04 கணினி மேசைகள், ஒலிபெருக்கி இயந்திரம், அதிகுளிர்சாதனப் பெட்டி நிதி நிலைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என உட்படுத்தியிருக்கவில்லை. | ரூபா 1,602,150 தொகை நடைமுறை அல்லாத சொத்துக்கள் என காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | குரிஞ்சன்கேணி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,097,650 தொகைக்கான 303 புசல் விதை நெல், விதை நெல் விற்பனவுக் கணக்கில் ரூபா 1,067,650 தொகையான காட்டப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 30,000 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை. | சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தோப்பூர் கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளாறு கூட்டுத்தொகை ரூபா 4,800,000 தொகை பெறுமதியான டீ.எஸ்.பீ 480 உரப் பைகள் காணப்பட்ட போதிலும், அதனை இருப்புக் கணக்கில் ரூபா 4,600,000 தொகை பெறுமதியான டீ.எஸ்.பீ 460 உரப் பைகள் என ரூபா 200,000 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் போது 2024 ஆண்டிற்கான முற்பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 602,350 தொகைக்கான ஏக்கர் வரி வருமானம் தோப்பூர் கமநல சேவைக் குழுவின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அடுத்த ஆண்டுக்காக கிடைத்துள்ள வருமானம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | முல்லிப்பொத்தானை கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 592,731 தொகைக்கான நடைமுறை அல்லாத சொத்துக்ள கொள்வவவு செய்தல் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் அந்த தொகையினால் செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மீது தேறிய காசுப்பாய்ச்சல் குறைவாகவும் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மீது தேறிய காசுப்பாய்ச்சல் மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு அலுவல்கள் தலைப்பின் கீழ் பிழையாக காட்டப்பட்டிருந்தது. இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | உப்புவேலி கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டு விதை நெல் விற்பனைகளின் கூட்டுத்தொகை ரூபா 6,631,800 தொகை எனினும், விதை நெல் விற்பனைக் கணக்கின் கூட்டுத்ததொகை ரூபா ൦> ൦൦< 2൦( தொகை என ரூபா 111,600 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இருப்பு வினியோகக் கணக்கின் மூலம் விற்பனைக் கணக்கிற்கு கூட்டுத்தொகையை எடுக்கும் போது இந்தத் தவறு ஏற்பட்டிருந்தது. அடுத்த ஆண்டுகளின் இவ்வாறான தவறுகள் இலாப சீராக்கல் கணக்கின் மூலம் சரி செய்யப்படும். | பரிசேதனை மேற்கொண்டு சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களுக்கு சீராக்கல் செய்ய வேண்டும். |
| (ஒ) | உப்புவேலி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டின் போது இரண்டு விதை நெல் வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 5,572,700 தொகை பெறுமதியான விதை நெல்லின் பெறுமதி விதை நெல் விற்பனைக் கணக்கில் ரூபா 5,820,500 தொகை என ரூபா 247,800 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | இருப்பு வினியோகக் கணக்கின் மூலம் விற்பனைக் கணக்கிற்கு கூட்டுத்தொகையை எடுக்கும் போது இந்தத் தவறு ஏற்பட்டிருந்தது. அடுத்த ஆண்டுகளின் இவ்வாறான தவறுகள் இலாப சீராக்கல் கணக்கின் மூலம் சரி செய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | கிளிவெட்டி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டின் போது விவசாயிகளுக்கு காசுக்காக விற்பனை செய்திருந்த யூரியா மற்றும் எம்ஓபீ உரங்களின் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 25,195,093 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 41,347,054 தொகை என காட்டப்பட்டிருந்தது. | காசுக்காக விற்பனை செய்யப்பட்டிருந்த யூரியா மற்றும் எம்ஓபீ உரத்தின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஔ) | கிளிவெட்டி கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டின் போது கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்திருந்த இரசாயன உரத்திற்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 18,,804,510 தொகை எனினும், அதனை நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 16,529,579 என காட்டப்பட்டிருந்தது. | கம்பனியினால் கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டியிருந்த குறிப்பிட்ட தொகை நிதி நிலைமைக் கூற்றில் 2024 ஆண்டிற்கான கணக்கறிக்கையின் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப் பிரகாரம் விசாரணை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | குச்சவெலி கமநல சேவைக் குழுவின் பெயரில் இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,027,525 இற்ாகன மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் இறுதிப் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளில் உட்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும். காசுப்பாய்ச்சல் கூற்றில் உட்படுத்தப்படும். | - மேற்படி - |
| (ங) | ஈச்சிலம்பற்று கமநல சேவைக் குழுவின் கட்டிடம் 2024 ஆண்டு ரூபா 2,842,453 தொகை செலவிடப்பட்டு திருத்த வேலை மேற்கொண்டிருந்ததுடன், அந்தப் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரி செய்யப்பட வேண்டும். |
| (ச) | கமநலத் திணைக்களத்தினால் 2021 ஆண்டு ஈச்சிலம்பற்று கமநல சேவைக் குழுவிற்கு வழங்கியிருந்த ரூபா 3,269,400 தொகை பெறுமதியான Shredder இயந்திரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அடுத்த கணக்கு அறிக்கைகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுக்களுக்கு சொந்தமான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இனமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 103,432,248 இற்கான பெற வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் மற்றும் கடன்பட்டோர் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிய செய்ய முடியாதிருந்தது. | உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான கணக்காய்வினால் வேண்டப்பட்ட சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 17 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 180,089,670 இற்கான செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் கொள்வனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாமல் இருந்தது. | உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 05 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 556,296 தொகை நடைமுறைச் சொத்து மீதிகள், 05 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 11,144,357 இற்கான நடைமுறை பொறுப்பு மீதிகள், 06 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 420,674 தொகை நடைமுறை அல்லாத சொத்துக்களின் மீதி மற்றும் 07 குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,041,750 இற்கான நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் மீதியை உறுதிப்படுத்துவதற்கான கணக்காய்வினால் வேண்டப்பட்ட அடிப்படை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் பௌதீக உளமையை உறுதிப்படுத்துவதற்காக முடியாமல் இருத்தல் ஆகிய காரணங்களினால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாமல் இருந்தது. | உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வின் போது உறுதிப்படுத்த வேண்டிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்** | | | |
| (i) | பிரிவு 43(9) | 10 கமநல சேவைக் குழுக்களினால் இரண்டு வருடாங்களுக்கு மிகையான காலம் முதல் வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் மற்றும் 123 விவசாய அமைப்புக்களினால் உரிய கூட்டங்கள் நடாத்துவதற்கு குழுவினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடைமுறை ஆண்டில் விவசாய அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஏற்பாடுகளை செயற்படுத்த வேண்டும். |
| (ii) | பிரிவு 55(1) | 08 கமநல சேவைக் குழுக்களினால் விவசாய காணிகளை நில அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் நில அளவை செய்து தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் படி மாவட்ட அலுவலகத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நி.பி. 110 | 13 குழுக்களினால் நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பதிவேடுகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 502(02) மற்றும் 756 | 12 குழுக்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணிச் சென்றிருக்காததுடன், அவற்றில் 04 குழுக்களினால் நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியாக சான்றுறுதி செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2017 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | 09 கமநல சேவை நிலையங்களினால் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க மீளாய்வாண்டில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | முழுமையான வரைவுத் திட்டம் திணைக்கள அறவுரைக்கு இணங்க மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

(அ) மீளாய்வாண்டின் போது 22 கமநல சேவைக் குழுக்களின் செயற்பாட்டு விளைவு ரூபா 11,897,451 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,262,775 தொகையாக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 10,634,676 தொகையினால் அதிகரித்திருந்தது. மிகையின் அதிகரிப்பிற்கு குழுக்களின் செயற்பாட்டு வருமானம் அதிகரித்தல் மற்றும் செயற்பாட்டு செலவுகள் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானச் செலவு கணக்கின் படி மீளாய்வாண்டின் போது 22 கமநல அபிவிருத்தி வங்கிகளின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,296,586 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,295,068 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகள் ரூபா 1,001,518 இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வயற் காணிப் பதிவேடு மற்றும் தரவு முறைமையின் படி தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குரிய அதிகாரப் பிரதேசத்தில் நெற்பயிர் செய்யக்கூடிய 6110 காணிகளில் 46 ஏக்கர் காணியை பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயிர் செய்யப்பட்ட வயற் காணிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க வயற் காணிகளின் முழுமையான விதைக்கும் பரப்பினை வயற்காணிப் பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் வயற் காணிகள் தொடர்பாக 06 கமநல சேவைக் குழுக்களுக்கு கிடைத்திருந்த 579 முறைப்பாடுகளை விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | விசாரணை மேற்கொள்வதற்கு (பரிசோதனை செய்வதற்கு) உரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது. | கிடைக்கக்கூடிய முறைப்பாடுகள் தொடர்பாக காலப் பகுதியினுள் விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 02 கமநல சேவைக் குழுக்களினால் ரூபா 375,578 செலவில் தயாரிக்கப்பட்டிருந்த மாதிரித் தோட்டம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நீண்ட கால முதலீட்டில் பௌதீக உளமையை உறுதிப்படுத்தி அதன் மூலம் வருமானம் ஒன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட கால முதலீட்டில் பௌதீக உளமையை உறுதிப்படுத்தி அதன் மூலம் வருமானம் ஒன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கோமரன்கடவல கமநல சேவைக் குழுவின் முன்னைய ஆண்டுகளின் போது தேசிய உரக் கம்பனியிலிருந்து கொள்வனவு | பதிலளித்திருக்கவில்லை. | களஞ்சியத்திலுள்ள உரப் பைகளை விற்பனை செய்வதற்கு சேதமடைந்துள்ள உரம் |

| | | | |
|---|---|---|---|
| | செய்திருந்த ரூபா 4,800,000 தொகை பெறுமதியான 50 கிலோ கிராம் எடையுள்ள 480 TSP உரப் பைகள் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் மீதியாக காணப்பட்டதுடன், தனியார் கம்பனி ஒன்றிலிருந்து கொள்வனவு செய்திருந்த ரூபா 162,000 தொகை பெறுமதியான மேலும் 90 உரப் பைகள் மீளாய்வாண்டளவில் சேதமடைந்து காணப்பட்டது. | | தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | புல்மோட்டை கமநல சேவை அதிகார பிரதேசத்தில் 1747 ஏக்கர் வயற்காணி பயிர் செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | எமது கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைவிடப்பட்ட காணிகளுக்காக பதிவேடுகள் காணப்பட்ட போது அந்த காணிகளை துப்புரவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கும் படி திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br>அங்கீகாரம் கிடைத்த பின்னர் அந்தக் காணிகளை துப்புரவு செய்து நெற்பயிர்ச் செய்கைக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான கண்காணிப்பொன்றுடன் பயிர் செய்யப்படாத காணிகளை பயிர் செய்யும் நிலைமைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கிண்ணியா கமநல சேவைக் குழுவினால் தவணைகளாக செலுத்தப்படும் அடிப்படையில் 2008 ஆண்டில் விவசாயி ஒருவருக்கு வழங்கியிருந்த ரூபா 200,000 தொகை பெறுமதியான இரண்டு சில்லு டிரக்டர் வண்டியின் பெறுமதியில் ரூபா 120,000 தொகை மீளாய்வாண்டு இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட நபர் இறந்துள்ளதால் , அவரின் ஆண் பிள்ளைகளிடம் அறவீடு செய்வதற்காக கமநல நியாய சபையில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை கமநல நியாய சபையினால் வழக்கை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. எனினும், எதிர் காலத்தில் குறிப்பிட்ட வழங்கினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப் பிரகாரம் செயற்பட்டு நிலுவைத் தவணைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | CSIAP நிறுவனத்தினால் 2022 பெப்ரவரி மாதம் கோமரம்கடவல கமநல சேவை நிலையத்திற்கு வழங்கியிருந்த 04 நெற்பயிர் செய்கை இயந்திரங்கள் பயன்படுத்தும் முறை | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு அல்லது முறையான அங்கீகாரத்துடன் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | தொடர்பாக ஆலோசனை வழங்கப்படாமை மற்றும் பயன்படுத்துவதற்கு அதிக செலவொன்று மேற்கொள்ள நேரிடுதல் ஆகிய காரணங்களினால் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | | தேவைப்படுகின்ற கமநல சேவைக் குழுவொன்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | புல்மோட்டை கமநல சேவைக் குழுவின் வங்கி நடைமுறைக் கணக்கில் 10 மாதத்தை விட மிகையான காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 216,966 இற்கான தொகை செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு அல்லது நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த கணக்கில் காணப்படும் தொகை ரூபா 216,966 தொகையினை உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து வட்டி வருமானம் ஒன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளில் செயற்படாது காணப்படுகின்ற பணத்தை ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 02 கமநல சேவைக் குழுக்களின் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 359,970 இற்கான சேதனப் பசளை இருப்பொன்று மீளாய்வாண்டு இறுதியளவில் விளைவற்றுக் காணப்பட்டதுடன், 03 குழுக்களின் கூட்டுத்தொகை 1,324,873 இற்கான சேதனப் பசளை இருப்பொன்று காலவதியாகியிருந்தது. மேலும், 02 கமநல சேவைக் குழுக்களின் களஞ்சியத்தில் காலவதியாகிய சேதனப் பசளை 23,958 கிலோ கிராம் மற்றும் சேதன திரவப் பசளை 13,354 லீற்றர் மீதியாக காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | மாவட்ட உதவி ஆணையாளரின் அறிவுரை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறிப்பிட்ட உரத்தினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விவசாயிகளின் தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்து சேதனப் பசளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அந்த இருப்புக்கள் காலவதியாகுவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கமநல சேவைக் குழுக்களில் பெறுமதி குறிப்பிடப்படாத திருத்த வேலை மேற்கொள்ளப்படாத டிரக்டர் வண்டியொன்று மற்றும் 05 விவசாய திரவம் தெளிக்கும் இயற்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | டிரக்டருக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 03 திரவம் தெளிக்கும் இயந்திரங்கள் பயன்படுத்துவதற்கு முடியுமான நிலையில் உள்ளது. | டிரக்டரை திருத்த வேலை மேற்கொண்டு வாடகைக்கு வழங்குதலும், திரவம் தெளிக்கும் இயந்திரத்தை முறையான செய்முறை ஒன்றின் கீழ் விவசாயிகளுக்கு பயன்படுத்துவதற்காக வழங்குதலும் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்கொள்ள வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் போது 22 கமநல குழுக்களில் 33 அபிவிருத்தி உத்தியோகத்தர் மிகையாகவும், 10 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், 12 முகாமைத்துவ உதவியாளர்கள், 78 விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்கள், 04 காவலாளிகள் மற்றும் 06 அலுவலக உதவியாளர்கள் வெற்றிடங்கள் காணப்பட்டன. | மனிதவள தொடர்பான தகவல்கள் மாவட்ட உதவி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினரை மீண்டும் மீளாய்வு செய்து தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகை பதவியணியினரை ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 16 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 228 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவிடப்பட்டிருக்காத கடன் மற்றும் வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 17,473,652 தொகையினை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | கடன் செலுத்தாத விவசாயிகளை இணக்கச் சபைக்கு தொடர்புபடுத்தி கடனை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 கமநல வங்கிகளினால் மீளாய்வாண்டின் போது 60 விவசாயிகளுக்காக கூட்டுத்தொகை 4,011,400 இற்கான விவசாய கடன் வழங்கியிருந்த போதிலும், அந்தக் கடன் வழங்கும் போது குறிப்பிட்ட ஆவணங்கள் பெற்றுக்கொள்ளாமல் கடன் விண்ணப்பங்கள் முறைப் பிரகாரம் பூர்த்தி செய்யாமல் கடன் வழங்கப்பட்டிருந்தது. | கமநல வங்கிகள் காணப்படும் உத்தியோகத்தர்கள் கணக்கீடு தொடர்பாக குறைந்த அறிவொன்றுடன் காணப்பட்டமையால் ஆவணங்ள் உரிய முறையில் பூர்த்தி செய்திருக்கவில்லை. அத்துடன் பிரிவுத் தலைவரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முழுமையான கண்காணிப்பின் கீழ் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான அனைத்து சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் ஆவணங்களை பூர்த்தி செய்து கடன் வழக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2020 ஒக்தோபர் 08 திகதிய 09/2020 இலக்கம் கொண்ட மற்றும் 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட நிதிக் கட்டுப்பாடு மற்றும் அறிக்கையிடல் தொடர்பான கமநல வங்கி முகாமைத்துவ சுற்றறிக்கை இணங்க மீளய்வாண்டின் போது பங்குதாரர்களின் மற்றும் வைப்புதாரர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு 15 கமநல வங்கிகளினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் பங்குதாரர்கள் மற்றும் வைப்புதாரர்தளின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |